# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜனவரி மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 29.01.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

<u>பொருள் : 1</u>

இந்நகராட்சி அலுவலகத்தில் மின்தடை ஏற்படும் பொழுது அலுவலகப் பணிகள் மேற்கொள்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இந்நகர் பொதுமக்களின் சேவையை கருத்தில் கொண்டு இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக 25 K.V.A ஜெனரேட்டர் வாஙகுவதற்கும் கான்கிரிட் பெட் மற்றும் மேற்கூரை அமைத்து அதற்கான மின்சாதன உதிரி பொருட்கள் பொருத்தும் பணி மேற்கெள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.197 நாள் 31.08.2017–ன் படி அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காணும் பணியை செய்ய 05.01.2018 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி அலுவலகத்தில் புதிதாக 25 K.V.A ஜெனரேட்டர் விநியோகம் மற்றும் செட் அமைக்கும் பணி. | 4.80 | ஜீ.வி ஏஜென்ஸி, மதுரை. | மதிப்பீட்டு தொகைக்கு 0.16% குறைவு |
| | | | ஆர்.எஸ்.கேஏஜென்ஸி, திருச்சி | மதிப்பீட்டு தொகைக்கு 1.50% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜீ.வி ஏஜென்ஸி, மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>(ந.க.எண். 823/2017/இ1)</u>**

**<u>தீர்மானம் எண்.304</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 2</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் கிழக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகம் 24.05.2015 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தில் உள்ள நாளஙகள்,பாத்திரஙகள் மற்றும் தளவாடப் பொருட்கள் (Vessels and utensils) தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் பொதுமக்கள் உணவருந்தும் கூடத்தில் உள்ள மின் விசிறிகள் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை (RO Water Plant ) மற்றும் கை கழுவும் இடம் (Sink Unit) பழுதுகள் நீக்கம் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.287 நாள் 29.12.2017–ன் படி அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகளை செய்ய 18.01.2018 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

**(கோப்பு எண்.1444/2017/இ1)**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி அம்மா உணவகத்தில் நாளஙகள்,பாத்திரஙகள் மற்றும் தளவாடப் பொருட்கள் (Vessels and utensils) புதியதாக பொருத்தல் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை (RO Water Plant) மற்றும் கை கழுவும் இடம் (Sink Unit) பழுது நீக்கம் செய்யும் பணி. | 7,50,000/– | ஸ்ரீ சாய் இன்டஸ்டிரிஸ், T–382, காட்டூர், திருமுல்லை வாயில், சென்னை | மதிப்பீட்டு தொகைக்கு 0.25% குறைவு |
| | | | லெட்சுமி எண்டர்பிரைசஸ், 20/23எ, கதவு எண் டி , சாந்தி பிளாட், திருவான்மீயூர், சென்னை | மதிப்பீட்டு தொகைக்கு 1.25 % அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.25% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் ஸ்ரீ சாய் இன்டஸ்டிரிஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.305</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 3</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகில் புதிதாக பொதுமக்கள் பயன்படுத்த கழிவறை அமைக்கப்பட்டுள்ளது.கழிவறையில் போதிய தண்ணீர் சேமித்து வைக்க தொட்டிகள் இல்லாத காரணத்தால் புதிதாக தொட்டிய அமைக்கவும் மேலும் பேருந்து நிலையம் அருகில் உள்ள கழிவு கால்வாய் உடைபட்டு கழிவுநீர் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.289 நாள் 29.12.2017 –ன் படி அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகளை செய்ய 18.01.2018 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

**(கோப்பு எண்.1492/2017/இ1)**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி புதிய பேருந்துநிலைய பின்புறம் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறையில் தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டி அமைத்தல் மற்றும் புதிய பேருந்துநிலையம் அருகில் உள்ள கழிவுநீர் வாறுகால்கள் உடைப்பு பழுது நீக்கம் செய்யும் பணி. | 2.25 | திரு.ஆர்.உத்தண்டி, ஒப்பந்தகாரர் இராமநாதபுரம் | மதிப்பீட்டு தொகைக்கு0.14 % குறைவு |
| | | | திரு.பழனி, ஒப்பந்தகாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகைக்கு 1.27 % அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மதிப்பீட்டு தொகையை விட 0.14 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் ஆர்.உத்தண்டி, இராமநாதபுரம் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.306</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

இந்நகர்மன்ற தீர்மான எண்.275 நாள்.30.11.2017–ன் தேதிய அனுமதியின்படி பொதுசுகாதாரம் – கீழக்கரை நகராட்சி – டெஙகுக் காய்ச்சல் மற்றும் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைப் பணிகள் – 2017 இந்நகராட்சி கொசுபுழு ஒழிப்புப் DBC பணியாளர்கள் 40 நபர்கள் துரிதமாகவும், மேன்மையாக பணிபுரியும் வகையில் தேவையான உபகரணஙகள் விநியோகம் செய்வதற்கு 05.01.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | விபரம் | விலையின் விகிதம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | தூத்துக்குடி மாவட்ட கிளினிங் புராடெக்ட் புரொடிசார்ஸ் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம்,லிட் கோவில்பட்டி | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு, லிட், தூத்துக்குடி. | திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு, லிட் திருநெல்வேலி. |
| 1 | அடையாள அட்டை (ID card) | 1 எண்ணம் | ரூ.150/– | ரூ.170/– | ரூ.160/– |
| 2 | அளவீடு உருளை 200ml (Measuring flask) | 1 எண்ணம் | ரூ.75/– | ரூ.85/– | ரூ.80/– |
| 3 | திருப்புளி (ScrewDriver) | 1 எண்ணம் | ரூ.450/– | ரூ.500/– | ரூ.470/– |
| 4 | புழு அள்ளும் கரண்டி (Worm Spoon) | 1 எண்ணம் | ரூ.900/– | ரூ.950/– | ரூ.975/– |
| 5 | சுத்தியல் 200 gm (Crowber) | 1 எண்ணம் | ரூ.600/– | ரூ.700/– | ரூ.650/– |
| 6 | கை விளக்கு (Torch Light) | 1 எண்ணம் | ரூ.350/– | ரூ.400/– | ரூ.370/– |
| 7 | கையுறை (Gloves) | 1 எண்ணம் | ரூ.300/– | ரூ.350/– | ரூ.320/– |
| 8 | தொப்பி (Cap) | 1 எண்ணம் | ரூ.250/– | ரூ.270/– | ரூ.265/– |
| 9 | மேல் அங்கி (Reflecting Jacket) | 1 எண்ணம் | ரூ.400/– | ரூ.430/– | ரூ.420/– |
| 10 | முகவுரை (Mask) | 1 எண்ணம் | ரூ.150/– | ரூ.170/– | ரூ.165/– |
| | கூடுதல் | | GST–18 சதவீதம் | GST–18 சதவீதம் | GST–18 சதவீதம் |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் கூடுதல் GST–18 சதவீதம் (1–எண்ணம்) குறிப்பிட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தூத்துக்குடி மாவட்ட கிளினிங் புராடெக்ட் புரொடிசார்ஸ் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம்,லிட்கோவில்பட்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார நலன் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு கொசுபுழு ஒழிப்புப் DBC பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வாஙகுவதற்கு இந்நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.307** அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 5

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்21 தட்டான் தோப்பு மற்றும் வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை மற்றும் வார்டு எண்16 புதுக்குடி ஆகிய இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்படி கழிவு நீர்ரேற்று நிலைத்தில் உள்ள மின்மோட்டார்/ஆயில் மோட்டர்களை இயக்கும் பணிகளை 2017–2018–ம் ஆண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) செய்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.269 நாள் 30.11.2017 –ன் படி அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகளை செய்ய ஆறு நபர் ஒப்பந்த அடிப்படையில் வழஙகுவதற்கு 29.12.2017 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

**(ந.க.எண். இ1/1300–2 /2015)**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 3 கழிவு நீர்ரேற்று நிலையஙகளில் உள்ள மோட்டர்களை இயக்கும் பணி செய்ய 2017–2018–ம் ஆண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) இரவு மற்றும் பகல் நேரஙகளில் பணி செய்வதற்கு இருவர் வீதம் 6 நபர்கள் ஆறு நபர் வழஙகுதல். | 11.00 | 1) சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு , தூத்துக்குடி.<br>2) திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு, திருநெல்வேலி. | மதிப்பீட்டு தொகைக்கு 0.06% குறைவு<br>மதிப்பீட்டு தொகைக்கு 1.32% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு, தூத்துக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.308** அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 6

கீழக்கரை நகராட்சி உரஙகிடஙகில் சேகரமாகும் குப்பைகள் மீது, ஓடோபிரஷ் (கான்ஸ்சண்டிரேட்) **Odofresh (Concentrate)** என்ற துர்நாற்ற கண்ட்ரோலர், குப்பைகளால் ஏற்படும் துர்நாற்றத்தினை விரைவில் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் பாக்டீரியா, குப்பைகளில் கலந்துள்ள “வோலடைல் அமீன்ஸ் மற்றும் மெர்கேப்டன்ஸ்” (Volatile Amines & Mercaptans) துர்நாற்றத்தினை எளிதில் போக்கும் தன்மையுடைய கிருமிநாசினி பொருட்கள் வாஙகும் பணி மேற்கொள்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.295 நாள் 29.12.2017 –ன் படி அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகளை செய்ய 24.01.2018 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

**(கோப்பு எண்.1445/2017/இ1)**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி உரங்கிடங்கில் சேகரமாகும் குப்பைகள் மீது, ஒடோபிரஷ் (கான்ஸ்சண்டிரேட்) **Odofresh (Concentrate)** என்ற துர்நாற்ற கண்ட்ரோலர், குப்பைகளால் ஏற்படும் துர்நாற்றத்தினை விரைவில் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் பாக்டீரியா, குப்பைகளில் கலந்துள்ள ''வோலடைல் அமீன்ஸ் மற்றும் மெர்கேப்டன்ஸ்'' (Volatile Amines & Mercaptans) துர்நாற்றத்தினை எளிதில் போக்கும் தன்மையுடைய கிருமிநாசினி பொருட்கள் வாங்கும் பணி | 2,85,000/– | அவர்ஜனா, சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் போரூர் சோமசுந்தரம் தெரு, டிநகர், சென்னை | மதிப்பீட்டு தொகைக்கு 0.05 % குறைவு |
| | | | ஸ்ரீ சாய் இன்டஸ்டிரிஸ், T–382, காட்டூர், திருமுல்லை வாயில், சென்னை | மதிப்பீட்டு தொகைக்கு 0.39% அதிகம் |

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் அவர்ஜனா, சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>**தீர்மானம் எண்.309**</u> அனுமதிக்கப்பட்டது.

<u>**பொருள் : 7**</u>

இந்நகர்மன்ற தீர்மான எண்.298 நாள்.29.12.2017–ன் தேதிய அனுமதியின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையம் கிழக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகம் 24.05.2015 முதல் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் துரிதமாக நடைபெறுவதற்கும் மேன்மையாக செயல்படுவதற்கும் சமையல் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும் கீழ்க்காணும் பட்டியலின் படி உரிய உபகரணங்களை வாங்குவதற்கு செய்வதற்கு 05.01.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1467/2017/இ1)**

| வ. எண் | விபரம் | விலையின் விகிதம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | தூத்துக்குடி மாவட்ட கிளினிங் புராடெக்ட் புரொடிசார்ஸ் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம்,லிட் கோவில்பட்டி | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு, லிட், தூத்துக்குடி. | திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு, லிட் திருநெல்வேலி. |
| 1 | கையுறை (Gloves) | 4400 எண்ணம் | ரூ.17600/– GST–18 சதவீதம் | ரூ.17800/– GST–18 சதவீதம் | ரூ.18900/– GST–18 சதவீதம் |
| 2 | தொப்பி (Cap) | 1500 எண்ணம் | ரூ.5700/– GST–12 சதவீதம் | ரூ.7300/– GST–18 சதவீதம் | ரூ.7400/– GST–18 சதவீதம் |
| 3 | துணி (Towel) | 25 எண்ணம் | ரூ.1375/– GST–5 சதவீதம் | ரூ.1475/– GST–18 சதவீதம் | ரூ.1500/– GST–18 சதவீதம் |
| 4 | சுத்தம் செய்யும் துணி (Khadi Cloth) | 3 (Roll) எண்ணம் | ரூ.9000/– GST–5 சதவீதம் | ரூ.9200/– GST–18 சதவீதம் | ரூ.9300/– GST–18 சதவீதம் |
| 5 | கேஸ் லைட்டர் பெரியது (Gas Lighter) | 3 எண்ணம் | ரூ.375/– GST–18 சதவீதம் | ரூ.450/– GST–18 சதவீதம் | ரூ.500/– GST–18 சதவீதம் |
| 6 | முதலுதவி பெட்டி (First Aid Box) | 1 எண்ணம் | ரூ.1300/– GST–18 சதவீதம் | ரூ.1400/– GST–18 சதவீதம் | ரூ.1450/– GST–18 சதவீதம் |
| 7 | மேல் அங்கி (Jacket) | 24 எண்ணம் | ரூ.8400/– GST–5 சதவீதம் | ரூ.8800/– GST–5 சதவீதம் | ரூ.8900/– GST–5 சதவீதம் |

**அலுவலகக்குறிப்பு.**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் கூடுதல் GST-குறிப்பிட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தூத்துக்குடி மாவட்ட கிளினிங் புரோடெக்ட் புரொடிசார்ஸ் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம்,லிட் கோவில்பட்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. நிர்வாக நலன் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு அம்மா உணவக பராமரிப்பு மற்றும் சமையல் பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வாஙகவதற்கு இந்நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.310** அனுமதிக்கப்பட்டது.

**தனிஅலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**